2026 ஜூலை மாதம் 23– ஆம் தேதி வியாழக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 159/2025

2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23– ஆம் தேதி வியாழக்கிழமை திரு.P.அறிவழகன், Translator அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW2 (LW3) – வீரபாபு |
| தகப்பனார் பெயர்: | பால்ராஜ் |
| ஊர்: | ஆசாரிபட்டி |
| வட்டம்: | ஆண்டிபட்டி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | தலைமை காவலர், கண்டமனூர் காவல்நிலையம் |
| வயது : | 40 |

23.07.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது பணியாளர் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், கண்டமனூர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 31.01.2025ம் தேதி நான் தேனி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியிலிருந்தபோது, தேனி காவல்நிலைய சார்பு ஆய்வாளர் அவர்களின் உத்தரவின்படி தேனி காவல்நிலைய குற்ற எண்.364/2024 பிரிவுகள் 123, 274, 275 BNS & 6(b), 24(1) of COTPA Act –ன்படி கனம் தேனி, நீதித்துறை நடுவர்

நீதிமன்றத்தின் R.P.R.No.4/2025, 04.01.2025 பிரகாரம் என்னிடம் ஒப்படைத்த வழக்கு சொத்துக்களை, நிலையத்திலிருந்து கடவுச்சீட்டு பெற்று, கனம் தேனி, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அறிக்கை செய்து, வழக்கின் மாதிரி சொத்துக்களையும், தபாலையும் பெற்று, MDU/PRO/MISC-8/2025 பிரகாரம் 31.02.2025 ம் தேதி மதுரை, தடய வட்டார அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து, ஒப்புகைச்சீட்டு பெற்று, காவல்நிலையத்தில் அறிக்கை செய்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய போதிய அவகாசம் வழங்கியும், எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 23.07.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.07.23 16:21:42 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
23.07.2026